மெட்ரோ ரயில்

# வண்ணாரப்பேட்டை - உயர் நீதிமன்றம் இடையே சுரங்கப்பாதை பணி நிறைவு

சென்னை, மார்ச் 20: சென்னை மெட்ரோ ரயில் பணிக்காக வண்ணாரப்பேட்டையில் இருந்து உயர் நீதிமன்றம் வரையிலான சுரங்கம் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளதாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

வண்ணாரப்பேட்டையில் இருந்து உயர்நீதிமன்றம் வரையில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் சுரங்கம் அமைத்துள்ளது டனல் போரிங் இயந்திரம். இவ்வழியே இரண்டுப் பாதையிலும் முழுவதுமாக சுரங்கப் பணிகள் முடிவடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுரங்கப் பணிகள் முடிவடைந்ததையடுத்து, ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகளை இன்னும் சில நாள்களில் துரிதப்படுத்தவுள்ளது மெட்ரோ ரயில் நிர்வாகம்.



சென்னை உயர்நீதிமன்றம் பகுதியில் பூமிக்கு அடியில் சுரங்கம் தோண்டி முடித்துள்ள டனல் போரிங் இயந்திரங்கள்.

வண்ணாரப்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரை 14.3 கி.மீட்டர் தொலைவுக்கும் சென்ட்ரலில் இருந்து அண்ணா நகர் 2-வது அவென்யூ வரை 9.7. கி.மீட்டர் தொலைவுக்கும் சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது.

வண்ணாரப்பேட்டையில் இருந்து எழும்பூர் வரையிலான மெட்ரோ ரயில் வழித்தடம் சுரங்கம் வாயிலாக இயக்கப்படவுள்ளது.

இதற்காக சுரங்கம் அமைக்கும் பணிகள் கடந்தாண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வந்தன. வண்ணாரப்பேட்டையில் இருந்து எழும்பூர் வரை 2 சுரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை மேற்கொள்ள 2 டனல் போரிங் இயந்திரங்கள் (துளையிடும் ராட்சத கருவி) இரு சுரங்கப் பாதைகளை அமைத்து வருகின்றன.

சென்னை மெட்ரோ ரயில் சுரங்கப் பணிகள் 16 கிலோ மீட்டர் தூரத்துக்கு முடிவடைந்துள்ளன. மேலும் 8 கிலோ மீட்டர் தூரத்துக்கான சுரங்கம் அமைக்கும் பணிகள் சென்னையின் பல்வேறு இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**பூமிக்கு அடியில்:** சென்னை மெட்ரோ ரயில் சுரங்கப் பணியில் 12 ராட்சத டனல் போரிங் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. பிரான்ஸ், சீனா, ஹாங்காங் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் சுரங்கப் பணியில் ஈடுபட்டுள்ளன.

பூமிக்கு அடியில் சுமார் 20 மீட்டருக்கு கீழே ரயில் பாதை அமைக்கப்படுகிறது.

சாலை மட்டத்திலிருந்து 17 மீட்டர் கீழே தோண்டப்படுகிறது. 6.2 மீட்டர் விட்டம் கொண்டதாக பாதை அமைகிறது.

6.2 மீட்டர் விட்டத்தில் சுரங்கப் பாதை அமைவதால், அந்தப் பாதையிலிருந்து, தரைப்பகுதி 10 அடி உயரத்துக்கு மேல்தான் இருக்கும்.

இதனால் குடிநீர்க் குழாய்கள், கழிவுநீர் குழாய்களுக்கு பாதிப்பு இருக்காது. ஒரு நாளைக்கு 5 முதல் 6 மீட்டர் வரை சுரங்கம் தோண்டப்படும்.